**11.11.2025**

**அசல் வழக்கு எண். 128 /2023**

**வா.சா. 2 –** திரு. முருகன்

**சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

1. உங்களுக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அழைப்பானை வரவில்லை என்றும் வாதி கேட்டுதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் கையெழுத்துப் போட்டதாக கூறும் ஆவணம் எந்த ஆவணம் என்றால் டைப் செய்து கையில் எழுதிய புரோ நோட்.

2. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் டப்ளமோ படித்துள்ளேன். உங்களுடன் வேறு யாரு கையொப்பம் செய்தார் என்றால் ஒரு பெண்மனி கையொப்பம் செய்தார். அவரின் கனவர் பெயர் என்ன என்றால் பால்துரை. அவர்கள் எந்த ஊர் என்றால் செட்டிக்குளம். அந்த பெண் எத்தனை யையெழுத்துப் போட்டார். நானும் ஒரு சாட்சி யையெழுத்துதான் போட்டேன்.

3. அதில் கணேசன் கையெழுத்து போட்டாரா என்றால் ஆமாம் போட்டார். நிரூபண வாக்குமூலத்தில உள்ள கையெழுத்து உங்களுடையதா என்றால் ஆமாம். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்திற்கும் வாசாஆ 1ல் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் ஆமாம் நான் மாற்றியுள்ளேன்.

4. பிரதிவாதிக்கு கடன் வாங்க வேண்டிய அவசியத் தேவையில்லை என்றும் வாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1ல் உள்ள சங்கதிகள் வெவ்வேறு கையெழுத்தில் உள்ளது என்றால் ஒரே நாளில்தான் எழுதப்பட்டது.

5. கணேசன் அப்பாவை தெரியுமா என்றால் தெரியும். கணேசன் அப்பா என்ன வேலை செய்கிறார்ஏ ன்றால தற்போது சும்மாதான் இருக்கிறா. ஆறுமுகம் வீடு தெரியுமா என்றால் தெரியாது. அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் மாட்டு வியாபாரம். பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் மொத்தம் எத்தனைபேர்கள் இருந்தார்கள் என்றால் நாங்கள் 4 பேர்கள் மற்றும் அவரையும் சேர்த்து 5 பேர்கள்

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2025.11.11 17:42:36 +0530

இருந்தோம். அது என்ன கிழமை என்றால் ஞாபகம்இல்லை.

6. பிரதிவாதி வீடே கட்டவில்லை என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் வாதிக்குவேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 2 வது சாட்சிஎந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2025.11.11 17:42:42 +0530